**கவனிக்க.-** *2014.08.29 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி III பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1879 - 2014 සැප්තැම්බර් මස 05 වැනි සිකුරාදා - 2014.09.05

*1879 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1380 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1386 |


**கவனிக்க.-** *நகர சபைகள் (திருத்தச்) சட்டமூலம் 2014, ஓகத்து 1 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.*

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2014, செத்தெம்பர் மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2014, செத்தெம்பர் மாதம் 12 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - புத்தளம் மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2014, ஒற்றோபர் மாதம் 06 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2014, ஓகத்து 19.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| புத்தளம் | கற்பிட்டி | நுரைச்சோலைப் பிரிவின் பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், எல்விட்டிகல மாவத்தை, நாராஹேன்பிட்ட, புத்தளம் |
| புத்தளம் | முந்தல் | கடையார் மோட்டை, விருத்தோடைப் பிரிவின் பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி மற்றும் புத்தளம் பற்று பிரிவின் விவாக (பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், எல்விட்டிகல மாவத்தை, நாராஹேன்பிட்ட, புத்தளம் |

9-189

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி - நுவரெலியா மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2014, ஒற்றோபர் மாதம் 06 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2014, ஓகத்து 19.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| நுவரெலியா | அம்பகமுவ | பொகவந்தலாவ பிரதேசத்தின் அம்பகமுவ பிரிவின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், நுவரெலியா |

9-190

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி - மன்னார் மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2014, ஒற்றோபர் மாதம் 6 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2014, ஆவணி 21.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| மன்னார் | மடு | (காக்கையன்குளம்) மடுப் பிரிவில் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், மன்னார் |
| மன்னார் | நானாட்டான் | நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், மன்னார் |

9-191

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

முஸ்லிம் விவாக பதிவாளர் பதவியிலிருந்து நீக்குதல் - களுத்துறை மாவட்டம்

2006 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்து (திருத்தச்) சட்டத்தின் 9 ஆவது பிரிவின்கீழ், எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் களுத்துறை மாவட்டத்தின் களுத்துறை மற்றும் பாணந்துறை தொட்டமுனை பிரிவின் களுத்துறை தெற்குப் பிரதேசத்தில் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவியில் கடமையாற்றும் திரு. எம். எம். எம். பவுசர் அவர்கள் அச்சட்டத்தின் 2(8)(ஆ) பிரிவிற்கிணங்க மாகாண சபையின் அங்கத்தவர் என்ற காரணத்தினால் 2014.09.05 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் விதத்தில் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவியில் இருந்து நீக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | பிரிவும் பதவியும் | பதிவாளரின் பெயர் |
|---|---|---|---|
| களுத்துறை | களுத்துறை | களுத்துறை தெற்குப் பிரதேசத்தின் களுத்துறை மற்றும் பாணந்துறை பிரிவின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | எம். எம். எம். பவுசர் |

9-118

## கடற்றொழில், நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சு

### போக்குவரத்து அலுவலர் பதவி

கடற்றொழில், நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சில் வெற்றிடமாக இருக்கும் போக்குவரத்து அலுவலர் பதவிக்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்காக இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **கல்வித் தகைமை.**- பௌதீகவியல் மற்றும் கணிதம் உட்பட ஏனைய மூன்று விஞ்ஞான பாடங்களில் பொது தராதரப்பத்திர (உயர் தரப்) பரீட்சையில் ஒரே தடவையில் சித்தி பெற்றிருத்தல் மற்றும் மொழி, இலக்கியம், கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் விசேட சித்திபெற்றிருப்பதுடன் ஆறு (6) பாடங்களில் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

2. **தொழில் தகைமை :**

(i) மொறட்டுவை பல்கலைக்கழகத்தில் அல்லது அம்பாறை ஹாடி நிறுவனத்தினால் வழங்கப்பட்ட தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா சான்றிதழ் ; அல்லது

(ii) தேசிய தொழிற்பயிலுநர் மற்றும் தொழிற்பயிற்சி வழங்கும் அதிகார சபையினால் வழங்கப்பட்ட பொறியியல் தேசிய டிப்ளோமா சான்றிதழ் ; அல்லது

(iii) கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்பட்ட தேசிய உயர் பொறியியல் டிப்ளோமா ; அல்லது

(iv) இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் வழங்கப்பட்ட தொழில்நுட்ப டிப்ளோமா சான்றிதழ் ; அல்லது

(v) இலங்கை பொறியியல் நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட பொறியியல் பரீட்சையில் 1 ஆம் பகுதியை வெற்றிகரமாக நிறைவுசெய்திருத்தல் ; அல்லது

(vi) மோட்டார் தொழிலுக்கு உரிய தேசிய தொழில் தகைமை (NVQ) 6 ஆவது மட்டத்தில் தகைமைகளை நிறைவு செய்திருத்தல் ; அல்லது

(vii) உயர் கல்வி அமைச்சு மற்றும் மேற்குறித்த தொழில்நுட்ப சான்றிதழ் வழங்கும் நிறுவனங்களை விசாரித்து அதன் கருத்துக்களைப் பெற்றுக்கொண்டு மேற்குறித்த தொழில் நுட்ப தகைமைகள் சகல வழிகளிலும் சமமானதென மூன்றாந் தர மற்றும் தொழிற்பயிற்சி ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஏனைய தகைமைகளையும் பெற்றிருத்தல் வேண்டும்.

3. **அனுபவம்.**- அரச அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் போக்குவரத்து அலுவலர் பதவியில் ஒரு (1) வருட அனுபவம் பெற்றிருப்பது விசேட தகைமையாகக் கருதப்படும்.

4. **வயதெல்லை.**- விண்ணப்பப்படிவம் கையேற்கப்படும் இறுதித் திகதிக்கு 18 வயதுக்குக் குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

5. **ஏனைய தகைமைகள் :**

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ii) சிறந்த நற்குணம் கொண்டவராக இருத்தல் வேண்டும் ;

(iii) இலங்கையின் எப்பிரதேசத்திலும் சேவையாற்றக்கூடிய பதவியாக இருப்பதால், தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகள் நல்ல தேகாரோக்கியம் மற்றும் சிறந்த மனோநிலையைக் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும் ;

(iv) பதவிக்கு நியமிப்பதற்குத் தேவையான அனைத்து தகைமைகளையும் வர்த்தமானியில் குறித்துரைக்கப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் நிறைவுசெய்திருத்தல் வேண்டும்.

6. **சம்பளத் தொகுதி.**- பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 06/2006 (IV) இற்கு அமைய MN-3-2006A மாதாந்த சம்பள அளவு (ரூபா 15,005 - 4 x 180 - 6 x 240 - 11 x 320 - 20 x 360 - 27,885) உரித்துடையதாகும்.

7. **ஆட்சேர்த்துக்கொள்ளும் முறை.**- கட்டமைக்கப்பட்ட போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளில் தகைமை பெற்றவர்கள், ஆட்சேர்த்துக் கொள்வதற்கு எதிர்பார்க்கும் அலுவலர்களின் எண்ணிக்கைக்குச் சமமான தொகையினர் நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டு, அதில் பெற்ற புள்ளிகள் மற்றும் போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளையும் சேர்த்து மொத்தப் புள்ளிகளின் வரிசைக் கிரம அடிப்படையில் தேர்ந்தெடுக்கப் படுவர்.

*எழுத்துப் பரீட்சை :*

| பாடம் | ஆகக்கூடிய புள்ளிகள் | சித்தி பெறுவதற்கான புள்ளிகள் |
|---|---|---|
| நுண்ணறிவு மற்றும் பொது உளச்சார்பு | 100 | 40% |
| பொதுப் பரீட்சை | 100 | 40% |

எழுத்துப் பரீட்சைக்குரிய விடயங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது :

| வினாப்பத்திரத்தின் பெயர் | பாட விதானம் |
|---|---|
| 1. நுண்ணறிவு மற்றும் பொது உளச்சார்பு | கணித ஆற்றல், பிரச்சினைகளைத் தீர்க்கும் ஆற்றல், தர்க்க ரீதியாகச் சிந்திக்கும் ஆற்றல் மற்றும் பொது அறிவு ஆகிய தலைப்பின் கீழ் தயாரிக்கப்பட்ட விடயத்திற்குரிய குறுகிய வினாப்பத்திர மாகும். |
| 2. பொது வினாப்பத்திரம் இரண்டு பகுதிகள் | *I* ஆவது பகுதி.- சூழல் விஞ்ஞான கண்டுபிடிப்புகள், விஞ்ஞான அறிவு, சர்வதேச தகவல் தொடர்பான வினாக்களை உள்ளடக்கியதாகும். |
| | *II* ஆவது பகுதி.- மோட்டார் தொழில் சம்பந்தமான வினாக்களை உள்ளடக்கியதாகும். |

நேர்முகப் பரீட்சை.- புள்ளி வழங்கும் அடிப்படை :

| புள்ளிகள் வழங்கும் முக்கிய விடயங்கள் | ஆகக் கூடிய புள்ளிகள் | தேர்ந்தெடுப்பதற்குத் தேவையான புள்ளிகளின் அளவு |
|---|---|---|
| (i) மேலதிக கல்வித் தகைமைகள் | 20 | ஏற்புடையதன்று |
| (ii) மேலதிக தொழில் தகைமை | 25 | |
| (iii) மேலதிக அனுபவம் | 40 | |
| (iv) தகவல் தொழில் நுட்பம்/கணினி பற்றி பெற்ற தகைமைகள் | 10 | |
| (v) நேர்முகப் பரீட்சைக் குழுவினால் இனம் காணப்படும் தகுதிகள் | 05 | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | |

8. **சேவையில் சேர்த்துக்கொள்ளப்படும் நிபந்தனைகள் மற்றும் சேவை நிபந்தனைகள் :**

8.1 இந்த நியமனம் நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையது மாகும். மேலும் விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்துக்கு/ தபுதாரர்கள், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்துக்கு உதவுதொகை செலுத்துதல் வேண்டும்.

8.2 தாபனக் கோவை II ஆம் பிரிவின் 10 - 12 வரையான பிரிவுகளுக்குப் பொருத்தமுடையதாகும்.

8.3 இந்நியமனம் மூன்று (3) வருட தகுதிகூர் கடமை நிலைக்கு உட்பட்டதாகும். அத்துடன் இக்காலப் பகுதிக்குள் முதலாவது தடைதாண்டும் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

8.4 2007.05.28 ஆந் திகதிய 7/2007 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கைக்கு அமைய அரச மொழி சம்பந்தமான குறித்த தேர்ச்சியினை நிறைவு செய்தல் வேண்டும்.

9. **விண்ணப்பதாரரின் ஆளடையாளம்.**- விண்ணப்பத்தில் உள்ள சகல விடயங்களையும் முறையாகப் பூர்த்திசெய்து சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரிகள் மட்டுமே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

நேர்முகப் பரீட்சையின்போது சகல சான்றிதழ்களின் மூலப்பிரதிகள் மற்றும் முறையான சான்றிதழ்களின் பிரதிகள் சமர்ப்பித்தல் வேண்டும்.

நேர்முகப் பரீட்சையில் தங்களின் ஆளடையாளத்தை நிரூபிப்பதற்கு கீழ்க்குறிப்பிடப்படும் ஆவணங்களில் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-

(1) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அடையாள அட்டை ;

(2) செல்லுபடியான கடவுச்சீட்டு.

10. **விண்ணப்பம் அனுப்புதல் :**

(அ) 2014.09.29 ஆந் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்பதாகவோ கீழ்க்குறிப்பிடப்படும் முகவரிக்குக் கிடைக்கும் பொருட்டு பதிவுத்தபால் மூலமாக அனுப்புதல் வேண்டும். அத்தினத்திற்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும் :

செயலாளர்,
கடற்றொழில், நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சு,
புதிய செயலகம், மாளிகாவத்தை,
கொழும்பு 10.

(ஆ) சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பத்தின் மாதிரிப்படிவம் இந்த அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ளது. விண்ணப்ப தாரர்கள் தமது விண்ணப்பப்படிவத்தினை A4 அளவிலான கடதாசியில் இரு பக்கங்களையும் பயன்படுத்தி தயாரிக்கப்பட்டு முதற்பக்கத்தில் 1 முதல் 6 (ii) வரையும், 2 ஆவது பக்கத்தில் 7 முதல் 12 வரையும், 3 ஆவது பக்கத்தில் 13 முதல் 16 வரையும் வரக்கூடியதாக முறையாக தமது கையெழுத்தின் மூலம் நிரப்பப்பட வேண்டும். விண்ணப்பப்படிவத்துடன் அனுப்பும் குறித்த சான்றிதழ்களின் பிரதிகளை உண்மைப் பிரதிகள் என சான்றுப்படுத்தி சமர்ப்பித்தல் வேண்டும்.

(இ) விண்ணப்பத்தை உள்ளடக்கியிருக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில், "கடற்றொழில், நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் போக்குவரத்து அலுவலர் பதவிக்கான விண்ணப்பம்" எனத் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்.

(ஈ) விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் கையெழுத் தினை அரச கல்லூரி தலைவர்/சமாதான நீதவான் ஒருவர்/ சத்தியப்பிரமாண ஆணையாளர்/ சட்டத்தரணி/ பிரசித்த நொத்தாரிசு/முப்படையின் கட்டளையிடும் அலுவலர் ஒருவர்/ 22,935 ரூபாவிற்குக் குறையாத மாதாந்த ஒருங்கிணைந்த சம்பளத்திற்கு உரித்துடைய சேவையாற்றும் அரச அலுவலர் ஒருவர் உறுதிசெய்தல் வேண்டும்.

(உ) தற்போது அரச நிறுவனத்தில் சேவையாற்றும் விண்ணப்ப தாரர் தமது விண்ணப்பத்தை தத்தமது நிறுவனத் தலைவரின் ஊடாகச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஊ) இத்துடன் காணப்படும் மாதிரிப்படிவத்திற்கு அமையாத விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படும். விண்ணப்பம் தபாலில் தொலைந்துவிட்டது அல்லது தாமதமாகி விட்டது போன்ற முறைப்பாடுகள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

11. **தவறான தகவல்களை வழங்குதல்.**- உங்களால் அனுப்பப்படும் விண்ணப்பப்படிவத்தில் தரப்படும் விடயங்களில் ஏதேனும் பிழையான அல்லது தவறான தகவல்கள் தரப்பட்டுள்ளதாக தேர்ந்தெடுப்பதற்கு முன்னர் தெரியவரின் நீங்கள் பரீட்சார்த்த நிலையில் இருந்து நீக்கப்படுவீர்கள்.

அதேபோன்று பிழையான அல்லது தவறான தகவல்கள் நியமனத்தின் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் அதற்கான நடவடிக்கை யின்கீழ் பதவி இழக்கச் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

செயலாளர்,
கடற்றொழில், நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சு.

கடற்றொழில், நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சு,
புதிய செயலகம், மாளிகாவத்தை,
கொழும்பு 10.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கடற்றொழில், நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சு**

போக்குவரத்து அலுவலர் பதவி

(அலுவலகப் பாவனைக்கு மட்டும்)

விண்ணப்பிக்கும் மொழி :

சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

1. (i) முதலெழுத்துக்களுடன் பெயர் (தமிழில்) :----.
   (ii) முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலத்தில்) :----.
   (iii) முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர் (தமிழில்) :----.
   (iv) முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர் (ஆங்கிலத்தில்) : ----.

2. முகவரி :
   (i) அலுவலக :----.
   (ii) சொந்த :----.

3. தொலைபேசி இல. :
   (i) அலுவலக :----.
   (ii) சொந்த :----.

4. சேவையிலிருப்பின் :
   (i) தற்போதைய பதவி மற்றும் சேவையாற்றும் நிலையம் :----.
   (ii) அச்சேவையில் அமர்த்தப்பட்ட திகதி :----.

5. தேசிய ஆள் அடையாள அட்டை இல. :----.

6. (i) பால் (ஆண்/பெண்) :----.
   (ii) விவாகமானவர்/விவாகமாகாதவர்/தாரமிழந்தவர் :----.

7. (i) பிறந்த திகதி :

ஆண்டு [ ][ ][ ][ ] மாதம் [ ][ ] திகதி [ ][ ]

   (ii) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று வயது :

வருடங்கள் [ ][ ] மாதங்கள் [ ][ ] நாட்கள் [ ][ ]

8. நீர் இலங்கைப் பிரசையாக இருப்பது பரம்பரையாகவா ? பதிவினாலா ? :----.

9. கல்வி மற்றும் தொழில் தகைமைகள்.- சித்தி, தொழில் மற்றும்/ அல்லது துறைசார் தகைமைகள் போன்ற விபரங்களைக் குறிப்பிடுக.

(i) கல்வித் தகைமைகள் :

| பரீட்சை | வருடம் | தோற்றிய பிரதான பாடங்கள் | சித்தி | நிறுவனத்தின் பெயர் |
|---|---|---|---|---|
| | | | | |

(ii) தொழில் தகைமை :

| பரீட்சை | வருடம் | தோற்றிய பிரதான பாடங்கள் | சித்தி | நிறுவனத்தின் பெயர் |
|---|---|---|---|---|
| | | | | |

10. அனுபவம் :

| நிறுவனம் | சேவைக்காலம் |
|---|---|
| | |

11. கணினித் துறை சம்பந்தமாகப் பெற்ற அனுபவம் :----.
12. ஏனைய தகைமைகள் :----.
13. ஆங்கில மொழி சம்பந்தமான அறிவு :----.
14. ஏனைய சம்பந்தப்பட்ட தகவல்கள் :----.

இந்த விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்ட விபரங்கள் யாவும் எனது அறிவுக்கு எட்டிய வரையில் உண்மையானவையும், சரியான வையுமென இத்தால் உறுதி கூறுகிறேன். இங்கு தரப்பட்டுள்ள விபரங்களில் யாதேனும் பிழையானவை அல்லது பொய்யானவை என, நான் தேர்ந்தெடுப்பதற்கு முன்னர் தெரியவரின் நான் பதவிக்குத் தகுதியற்றவனாகக் கருதப்படுவதற்கும், நியமனத்தின் பின்னராயின் எவ்வித நட்டஈடும் இன்றி பதவி இழக்கச் செய்வதற்கும் ஆளாவேன் என்பதை நான் நன்கு அறிவேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

15. **விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்துதல்.**- கடற்றொழில், நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் போக்குவரத்து அலுவலர் பதவிக்கு இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ...................................... எனும்

பெயருடையவர் எனக்கு தனிப்பட்ட முறையில் நன்கு அறிந்தவர் எனவும், 2014 ஆம் ஆண்டு ......................... ஆம் மாதம் ................................ ஆந் திகதி இவர் எனது முன்னிலையில் கையொப்பம் இட்டார் எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

----,
கையொப்பத்தை உறுதிப்படுத்துபவரின்
கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரின் முழுப்பெயர் :----.
முகவரி :----.
திகதி :----.

16. (தற்போது அரச சேவையில்/மாகாண அரச சேவையில் உள்ள அலுவலர்களுக்கு மட்டும்.)

**திணைக்கள/நிறுவனத் தலைவரின் சான்றிதழ் :**

கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் போக்குவரத்து அலுவலர் பதவிக்கு விண்ணப்பிக்கும் இந்த நிறுவனத்தில் ................................... ஆகப் பணி புரியும் திரு./ திருமதி/ செல்வி .................................. எனும் பெயருடையவரினால் தரப்பட்டுள்ள விபரங்களைப் பரிசீலனை செய்து பார்த்தேன். அவ்விபரங்கள் யாவும் சரியானது எனவும், இவரைத் தெரிவுசெய்யப்படுமிடத்து தற்போது இவர் வகிக்கும் சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது எனத் தெரிவித்துக் கொள்கிறேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.
பதவி முத்திரை :

உறுதிப்படுத்துபவரின் முழுப்பெயர் :----.
முகவரி :----.
திகதி :----.

9-4

---

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

திருத்தம்

## அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் I ஆவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சை - 2014 (I)

2014, ஓகத்து மாதம் 8 ஆந் திகதிய 1875 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட "அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் I ஆம் வினைத்திறன்காண் தடைப் பரீட்சை - 2014 (I)" பரீட்சை அறிவித்தலில் "பந்தி 4 - தகைமை, மாதிரி விண்ணப்பப்படிவத்தில் பந்தி 6 இல் பிரிவு 6.2 மற்றும் 6.3, பிரிவு 7 இல் திணைக்களத் தலைவரின் சான்றுரையின் பிரிவு (ii)" ஆகியவை கீழ்வருமாறு திருத்தப்படுகிறது :

**4. தகைமை.**- அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் தரம் III இன் நியமனம் ஒன்றைப் பெற்றுள்ள உத்தியோகத்தர் ஒருவர் ;

அல்லது

அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு உள்ளீர்க்கப்படாத ஆனால் உள்ளீர்ப்பதற்கு விருப்பம் தெரிவித்துள்ள உத்தியோகத்தர் ஒருவர் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமையுடையவராவார்.

**குறிப்பு.**- இப்பரீட்சை அறிவித்தலுக்கு ஒத்திசைவாக மாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் விண்ணப்பதாரிகளுக்கான ஏற்பாடுகள் குறித்த மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் வெளியிடப்படும்.

**6. தற்போது வகிக்கும் பதவி :**

6.2 நியமனக் கடித இலக்கம் :----.

6.3 அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை தரம் III இல் நியமனம் பெற்ற திகதி/அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு உள்ளீர்ப்பதற்கு விருப்பம் தெரிவித்த திகதி :----.

**7. திணைக்களத் தலைவரின் சான்றுரை :**

(ii) இவ்வுத்தியோகத்தர் இணைந்த சேவைக்குச் சொந்தமானவர் என்றும்/அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு உள்ளீர்க்கப்படவில்லையென்றாலும் உள்ளீர்ப்புச் செய்வதற்கு விருப்பம் தெரிவித்துள்ளார் என்றும்,

மேற்படி திருத்தங்களினால் விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய இறுதித் திகதி 2014.09.15 ஆந் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது. இதுவரை விண்ணப்பித்த விண்ணப்பதாரிகள் இத்திருத்தம் காரணமாக மீண்டுமொரு விண்ணப்பம் அனுப்பக்கூடாது என அறியத்தருகின்றோம். குறித்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய விடயங்கள் அவ்வாறே வலுவிலிருக்கும்.

கே. வீ. பீ. எம். ஜே. கமகே,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்,
பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

பொது நிர்வாக மற்றும்
உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 7,
2014, ஓகத்து 22.

9-211

---

திருத்தம்

## அரசாங்க மொழிபெயர்ப்பாளர் சேவையின் வகுப்பு I இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2013 (2014)

2014, ஓகத்து மாதம் 22 ஆந் திகதிய 1877 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட "அரசாங்க மொழிபெயர்ப்பாளர் சேவையின்

வகுப்பு I இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2013 (2014)" பரீட்சை அறிவித்தலின் பரீட்சை விண்ணப்பப் படிவத்தின் பந்தி 7 இன் (ii) ஆம் பிரிவு கீழ்வருமாறு திருத்தப்படுகிறது :

7.

(ii) 2014.08.31 ஆந் திகதியில் வயது :

வருடங்கள் [ ][ ] மாதங்கள் [ ][ ] நாட்கள் [ ][ ]

இந்த திருத்தத்தினால் விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய இறுதித் திகதி நீடிக்கப்படவில்லை. குறித்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய விடயங்கள் அவ்வாறே வலுவிலிருக்கும்.

கே. வீ. பீ. எம். ஜே. கமகே,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்,
பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 7,
2014, ஓகத்து 22.

9-212

---

## இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு

தொழில்நுட்பக் கல்வி, பயிற்சித் திணைக்களம்

### தொழில்நுட்பக் கல்வி, பயிற்சித் திணைக்களத்தின் ஆரம்ப தேர்ச்சிபெற்ற சேவைத்தொகைக்கு உரித்தான பதவிகளின் வெற்றிடங்களுக்காக (திறந்த) ஆட்சேர்ப்புச் செய்தல் - 2013 (2014)

தொழில்நுட்பக் கல்வி, பயிற்சித் திணைக்களத்தினதும் அதன் கீழுள்ள தொழில்நுட்பவியல்/தொழில்நுட்பக் கல்லூரிகளிலும் ஆரம்ப தேர்ச்சிபெற்ற சேவைத் தொகைக்கு உரித்தான பின்வரும் பதவி வெற்றிடங்களைப் பூர்த்திசெய்வதற்காக, உரிய தகைமைகளைக் கொண்டுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :

| | ஆட்சேர்ப்பு செய்யப்படும் பதவி | வெற்றிட எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | ஒட்டுனர் | 13 |
| 2 | இயந்திர நிபுணர் | 11 |
| 3 | மின்னியலாளர் | 06 |
| 4 | மேசன் | 10 |
| 5 | தச்சர் | 03 |

1. **ஆட்சேர்ப்பு முறை**.- முதலில் தொழில்சார் பரீட்சையொன்று நடத்தப்படுவதோடு, அப்பரீட்சையில் திறமை அடிப்படையில் பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்பவர்களில் இருந்து, வெற்றிட எண்ணிக்கையின் இருமடங்கினர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையிலும் தொழில்சார் பரீட்சையிலும் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளின் மொத்த எண்ணிக்கைக்கு ஏற்ப திறமை அடிப்படையில் வெற்றிடங்கள் நிலவும் உரிய பதவிகளின் III ஆம் தரத்தில் ஆட்சேர்ப்பு செய்யப்படுவர்.

**தொழில்சார் பரீட்சை :**

| | பதவி | நேரம் (மணித்தியாலம்) | அதி கூடிய புள்ளிகள் | சித்தி அடைவதற்கான புள்ளிகள் | பாடப்பரப்பு |
|---|---|---|---|---|---|
| 1 | ஒட்டுனர் | 2 | 100% | 40% | 1. திட்டத்தை வாசித்து புரிந்து கொள்ளக் கூடிய ஆற்றல்<br>2. வேலைகள் தொடர்பிலான உரிய ஆக்கப் பொருட்களை அறிந்து கொள்ளல் |
| 2 | இயந்திர நிபுணர் | 2 | 100% | 40% | 1. பதவிக்கு ஏற்புடையதான மோட்டார் இயந்திர அறிவியல் தொடர்பான தொழில் நுட்பவியல் அறிவு<br>2. இயந்திரங்களில் ஏற்படும் பழுதுகளை இனங் காணல்<br>3. திருத்த வேலைகளுக்கான செலவு மாதிரிகளைத் தயாரித்தல் |
| 3 | மின்னியலாளர் | 2 | 100% | 40% | 1. மின்னியல் சார் நிர்மாணிப்பை தயாரித்தல் |

| | பதவி | நேரம் (மணித் தியாலம் | அதி கூடிய புள்ளிகள் | சித்தி அடைவ தற்கான புள்ளிகள் | பாடப்பரப்பு |
|---|---|---|---|---|---|
| | | | | | 2. மின்மானி உபகரணங்கள் மற்றும் அவற்றின் பாவனை தொடர்பான தெளிவு<br>3. மின்னியல் சார் நிர்மாணம் ஒன்றின் பழுதுகளை இனங்காணல் மற்றும் பராமரிக்கும் ஆற்றலை பரீட்சித்தல் |
| 4. | மேசன் | 2 | 100% | 40% | 1. நிர்மாணத் தொழிற் துறையில் பயன்படுத்தப்படும் சீமெந்துக் கலலை, கொங்றீட் கலவை தொடர்பான அறிவு<br>2. மேசன் தொழிலில் பயன்படுத்தப்படும் கருவிகள் தொடர்பான அறிவு<br>3. திட்டங்கள் தொடர்பிலான செலவு மாதிரிகளைத் தயாரித்தல் |
| 5. | தச்சர் | 2 | 100% | 40% | 1. திட்டங்கள் மற்றும் இலகுவான வரைதல்களை விளங்கிக் கொள்ளல் |

| | பதவி | நேரம் (மணித் தியாலம் | அதி கூடிய புள்ளிகள் | சித்தி அடைவ தற்கான புள்ளிகள் | பாடப்பரப்பு |
|---|---|---|---|---|---|
| | | | | | 2. வேலைகளுக்குப் பொருத்தமான பலகைகளை இனங்காணல், நிர்மாணத் துறை மற்றும் வீடமைப்பு தொடர்பிலான அடிப்படைத் தெளிவு<br>3. அடிப்படைக் கையுபகரணங்களை இனங்காணல் மற்றும் அதன் பிரயோகம் குறித்த தெளிவு |

**கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை :**

| புள்ளிகள் வழங்கப்படுவதற்கான பிரதான தலைப்புக்கள் | வழங்கப்படும் அதிகூடிய புள்ளிகள் |
|---|---|
| மேலதிக கல்வித் தகைமைகள் | 20 |
| மேலதிக தொழில்சார் தகைமைகள் | 50 |
| மேலதிக அனுபவம் | 25 |
| நேர்முகப் பரீட்சையில் வெளிக்காட்டும் திறமைகள் | 05 |
| மொத்தம் | 100 |

2. **கல்வித் தகைமைகள்**.- க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாதவாறு இரண்டு (2) திறமைச் சித்திகளுடன் ஆறு (6) பாடங்கள் சித்தியடைந்திருத்தல்.

3. ஒவ்வொரு பதவிக்கும் உரிய தொழில்சார் தகைமைகள் பின்வருமாறு.- (i) தொழில்சார் தகைமைகள்.- மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டவாறு தேசிய தொழில் தகைமை (NVQ) 4 ஆம் மட்டத்திற்குக் குறையாத, பதவிக்கு ஏற்புடையதான துறையில், பாடநெறியொன்றைப் பூர்த்திசெய்து அதில் சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

(அ) ஒட்டுனர் :

(1) தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களத்தினால் நடத்தப்படும் பொறியியல் தேர்ச்சி தொடர்பான தேசிய சான்றிதழ் (ஒட்டும் இயந்திர நிபுணர்) ;

அல்லது

(2) தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றில் ஒட்டும் வேலை தொடர்பாக முழுநேர பாடநெறி ஒன்றைத் தொடர்ந்தமைக்கான சான்றிதழ் ;

அல்லது

(3) தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை/தொழில் பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படும் ஒட்டுனர் II ஆம் தரத்திற்கான தேசிய தொழில் தகைமை சான்றிதழைப் பெற்றிருத்தல் ;

அல்லது

(4) மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் ஒரு வருட காலத்திற்குக் குறையாத ஒட்டும் வேலை தொடர்பான முழுநேரப் பாடநெறி ஒன்றைத் தொடர்ந்து அதில் சித்தியடைந்திருத்தல்.

(ஆ) இயந்திர நிபுணர் :

(1) தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களத்தினால் நடத்தப்படும் பொறியியல் தேர்ச்சி தொடர்பான தேசிய சான்றிதழ் (இயந்திர நிபுணர்) ;

அல்லது

(2) தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றில் இயந்திர அறிவியல் தொடர்பாக இரு வருட கால பாடநெறி ஒன்றில் சித்தியடைந்தமைக்கான சான்றிதழ் ஒன்றைப் பெற்றிருத்தல் ;

அல்லது

(3) மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் ஒரு வருட காலத்திற்குக் குறையாத இயந்திர நிபுணத்துவம் தொடர்பான முழுநேர கால பாடநெறி ஒன்றைத் தொடர்ந்து அதில் சித்தியடைந்திருத்தல்.

(இ) மின்னியலாளர் :

(1) அரச தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றினால் வழங்கப்படும் இரு வருட கால முழுநேர தொழில் சான்றிதழ் அல்லது பொறியியல் தொழில்சார் தேசிய சான்றிதழ் (மின்னியலாளர்) பெற்றிருத்தல் ;

அல்லது

(2) தேசிய பயிலுனர் சபை மூலம் (தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை) வழங்கப்படும் மூன்றரை (3 1/2) வருடகால மின்சக்தி நிபுணத்துவ சான்றிதழ் அல்லது மின்கம்பி இழுப்பவர் பாடநெறிக்கான மூன்று வருட கால சான்றிதழ் ;

அல்லது

(3) தேசிய தொழில் பரீட்சையில் மின் தொழில்நுட்பவியலில் தரம் II இற்காக வழங்கப்படும் சான்றிதழ் ;

அல்லது

(4) வேறு சமமான அல்லது உயர் சான்றிதழ்.

(ஈ) மேசன் :

(1) தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களத்தினால் நடத்தப்படும் பொறியியல் தேர்ச்சி தொடர்பான தேசிய சான்றிதழ் (மேசன்) பெற்றிருத்தல் ;

அல்லது

(2) தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றில் கட்டடத் தொழில் தொடர்பான இருவருட கால பாடநெறி ஒன்றில் சித்தியடைந்தமைக்கான சான்றிதழ் ஒன்றைப் பெற்றிருத்தல் ;

அல்லது

(3) தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களத்தினால் நடத்தப்படும் கட்டட நிர்மாணத் தொழில்நுட்பவியல் தொடர்பான தேசிய சான்றிதழைப் பெற்றிருத்தல் ;

அல்லது

(4) தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையினால் வழங்கப்படும் மேசன் பயிலுனர் சான்றிதழைப் பெற்றிருத்தல் ;

அல்லது

(5) தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையினால் அல்லது இலங்கை தொழில் பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படும் மேசன் தரம் II இற்கான தேசிய தொழில் சான்றிதழ் ;

அல்லது

(6) மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் ஒரு வருட காலத்திற்குக் குறையாத மேசன் தொடர்பான முழுநேரப் பாடநெறி ஒன்றைத் தொடர்ந்து அதில் சித்தியடைந்திருத்தல்.

(உ) தச்சர் :

(1) தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களத்தினால் நடத்தப்படும் பொறியியல் தேர்ச்சி தொடர்பான தேசிய சான்றிதழ் (இயந்திர மரவேலை) பெற்றிருத்தல் ;

அல்லது

(2) தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றில் தச்சுத் தொழில் மற்றும் பொருத்து வேலை தொடர்பான இருவருட கால பாடநெறி ஒன்றில் சித்தியடைந்தமைக்கான சான்றிதழ் ஒன்றைப் பெற்றிருத்தல் ;

அல்லது

(3) தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களத்தினால் நடத்தப்படும் கட்டிட நிர்மாணத் தொழில் நுட்பவியல் தொடர்பான தேசிய சான்றிதழைப் பெற்றிருத்தல் ;

அல்லது

(4) தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையினால் வழங்கப்படும் தச்சு வேலை பயிலுனர் சான்றிதழைப் பெற்றிருத்தல் ;

அல்லது

(5) தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையினால் அல்லது இலங்கை தொழில் பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படும் தச்சு வேலை தரம் II இற்கான தேசிய தொழில் சான்றிதழ் ;

அல்லது

(6) மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் ஒரு வருட காலத்திற்குக் குறையாத தச்சு வேலை தொடர்பான முழுநேரப் பாடநெறி ஒன்றைத் தொடர்ந்து அதில் சித்தியடைந்திருத்தல்.

4. **சேவை அனுபவம்**.- அரசினால் அல்லது அரசினால் பதியப்பட்ட நிறுவனமொன்றில் உரிய தொழில்துறையில் இரண்டு (2) வருடகால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

5. **வயதெல்லை**.- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று விண்ணப்பதாரிகள் 18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். அரசாங்க சேவையிலுள்ளவர்களுக்கு உச்ச வயதெல்லை கருத்திலெடுக்கப்பட மாட்டாது.

6. **சம்பளம்**.- பொது நிர்வாக சுற்றறிக்கை 6/2006 (IV) இற்கு அமைய இந்தப் பதவிக்கான சம்பளக் குறியீட்டு இலக்கம் PL-3-2006 (A) சம்பள அளவுத்திட்டம் ரூபா 12,470 - 10 x 130 - 10 x 145 - 10 x 160 - 12 x 170 - 18,860 உரித்தாகும்.

7. மேற்குறிப்பிடப்பட்ட பதவிகளுக்காக விண்ணப்பிக்கும் சகலரும் சிறந்த இயல்பையும் இலங்கையின் எப்பகுதியிலும் சேவையாற்றக்கூடிய வகையிலும் பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றக்கூடிய உடல் மற்றும் உள ஆரோக்கியத்தையும் கொண்ட இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும். ஒவ்வொரு பதவிக்கும் ஆட்சேர்ப்பு செய்வதற்குத் தேவையான சகல தகைமைகளையும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதியன்று எல்லா வகையிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

8. **விண்ணப்பப்படிவங்கள் அனுப்பப்பட வேண்டிய முறைகள்**.-

(i) விண்ணப்பப்படிவங்கள் 2014.10.06 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு "பணிப்பாளர் நாயகம், தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களம், த. பெ. இல. 557, ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். இறுதித் திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

(ii) சமர்ப்பிக்கப்பட வேண்டிய மாதிரி விண்ணப்பப்படிவத்தின் மாதிரி ஒன்று இவ்வறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ளது. விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை ஏ4 தாளைப் பயன்படுத்தி இலக்கம் 1 தொடக்கம் 7 வரை முதலாம் பக்கத்திலும், இலக்கம் 8 முதல் 11 வரை இரண்டாம் பக்கத்திலும் ஏனைய விடயங்களை அடுத்தடுத்த பக்கங்களிலும் வருமாறு விண்ணப்பப்படிவங்களைத் தயாரித்து தமது கையொழுத்தினால் முறையாகப் பூர்த்தி செய்தல் வேண்டும்.

(iii) விண்ணப்பப்படிவத்தை உள்ளடக்கிய கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "...................................................... (குறித்த பதவியைக் குறிப்பிடுதல் வேண்டும்.) பதவிக்கான விண்ணப்பம்" என்று தெளிவாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

(iv) ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்காக விண்ணப்பிக்க வேண்டியிருப்பின் ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனியான விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(v) பெறப்பட்ட விண்ணப்பங்களுள் அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்திசெய்த விண்ணப்பதாரிகள் மாத்திரமே தொழில்சார் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

(vi) தொழில்சார் பரீட்சைக் கட்டணம் 400 ரூபா ஆக இருப்பதோடு, அந்தக் கட்டணங்கள் தொழில்நுட்பக் கல்வி பயிற்சித் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் மக்கள் வங்கியின் மத்திய நகரக் கிளை இலக்கமான 176-100-139026228 எனும் கணக்கிலக்கத்திற்கு நாட்டிலுள்ள ஏதேனும் ஒரு மக்கள் வங்கிக் கிளையில் பணத்தைச் செலுத்தி, செலுத்தியதற்கான பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தில் உரிய பகுதியில் கழன்றுவிடாதவாறு ஒட்டுதல் வேண்டும். உங்கள் விண்ணப்பப்படிவத்தின் பிரதி ஒன்றையும் பற்றுச்சீட்டின் பிரதி ஒன்றையும் உங்களுடன் வைத்துக்கொள்வது உகந்ததாகும். எந்தவொரு காரணத்துக்காகவும் பரீட்சைக் கட்டணம் மீள வழங்கப்பட மாட்டாது என்பதோடு, காசுக்கட்டளைகள் மற்றும் முத்திரைகள் என்பனவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

(vii) விண்ணப்பப்பத்திரத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பமானது, அரசாங்க பாடசாலை ஒன்றின் அதிபர், சமாதான நீதவான்/ சத்தியப்பிரமாண ஆணையாளர்/ சட்டத்தரணி/ பிரசித்த நொத்தாரிசு/ முப்படை அதிகாரி ஒருவர் அல்லது 20,030 ரூபாவை திரட்டிய மாதாந்த சம்பளமாகப் பெறும் அரசாங்கத்தில் நிரந்தர பதவி வகிக்கும் அதிகாரி ஒருவர் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(viii) தற்போது அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள், தமது விண்ணப்பப்படிவங்களைத் தாம் சேவையாற்றும் திணைக்களத்தின் திணைக்களத் தலைவரூடாக அனுப்புதல் வேண்டும்.

(ix) இங்கு காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு மாற்றமான விண்ணப்பப்படிவங்கள், பூரணமில்லாத தகவல்கள் அடங்கிய விண்ணப்பப்படிவங்கள் மற்றும் விண்ணப்பங்களைப் பொறுப்பேற்கும் இறுதித் திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விண்ணப்பங்களை தபாலில் அனுப்பும்போது ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்ப்பதற்காக முன்கூட்டியே விண்ணப்பங்களை அனுப்புதல் உகந்ததாகும். விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றியும் அறியத்தரப்பட மாட்டாது. உரிய தகைமைகள் பூர்த்திசெய்யப்படாத விண்ணப்பப் படிவங்கள் மற்றும் உரிய முறையில் பூர்த்திசெய்யப்படாத விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும்.

(x) விண்ணப்பப்படிவங்களில் குறிப்பிடப்பட்ட ஏதேனும் தகவல்கள் போலியானவை அல்லது பிழையானவை என ஆட்சேர்ப்பிற்கு முன்னர் கண்டுபிடிக்கப்பட்டால் விண்ணப்பதாரியின் அபேட்சகத் தன்மை நிராகரிக்கப்படும். அவ்வாறான போலியான அல்லது பிழையான தகவல்கள் ஆட்சேர்ப்பிற்குப் பின்னர் கண்டறியப்பட்டால் அதற்குரிய ஏற்பாடுகளுக்கு ஏற்ப சேவையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

9. **அரச கரும மொழிக்கொள்கையை அமுலாக்கல்.**- பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் : 07/2007 மற்றும் அதற்கு இயைபான சுற்றறிக்கைகளுக்கு ஏற்ப குறித்த மட்டத்தில் ஏனைய அரச கரும மொழி தொடர்பான தேர்ச்சியை சேவையில் இணைந்து ஐந்து (5) வருட காலத்தினுள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

10. **தொழில்சார் பரீட்சை நடபடி முறைகள்.**- (i) ஒழுங்கான முறையில் விண்ணப்பங்களை அனுப்பிய அடிப்படைத் தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பதாரிகளுக்கு தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தினால் பரீட்சைக்கான அனுமதி அட்டை வழங்கப்படும். விண்ணப்பதாரி தமக்கு குறிக்கப்பட்ட பரீட்சை மத்திய நிலையத்தின் பரீட்சை மேற்பார்வையாளரிடம் தமது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையைச் சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதி அட்டை சமர்ப்பிக்காத எந்தவொரு விண்ணப்ப தாரியும் தொழில்சார் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்.

(ii) தொழில்சார் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக விண்ணப்பதாரர்களுக்கு போக்குவரத்துச் செலவுகளுக்காகவோ அல்லது இதர செலவுகளுக்காகவோ வேறெந்தக் கொடுப்பனவும் வழங்கப்பட மாட்டாது.

(iii) பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்திப்படுமளவு விண்ணப்பதாரர், தமது ஆளடையாளத்தை பரீட்சை மண்டபத்தில் உறுதிப்படுத்தல் வேண்டும். இதன் பொருட்டு-

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;

அல்லது

(ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு என்பவை மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும்.

(iv) தொழில்சார் பரீட்சைகளை நடாத்துதல் தொடர்பாக தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டவிதிகளுக்கு பரீட்சை அபேட்சகர்கள் கட்டுப்பட்டுள்ளனர்.

11. **சேவையில் அமர்த்தப்படுவதற்கான நிபந்தனைகள்.**- (i) இந்தப் பதவி நிரந்தரமானது. ஓய்வூதியத்தைக் கொண்டது. விதவை/அநாதை/ தாரமிழந்தவர் அநாதை ஓய்வூதிய நிதியத்திற்கு சந்தா செலுத்துதல் வேண்டும்.

(ii) குறிப்பிடப்படுவதற்கு அமைய இந்தத் திணைக்களத்திற்கு உட்பட்ட எந்தவொரு தொழில்நுட்பவியல்/தொழில்நுட்பக் கல்லூரியிலும் சேவையாற்றுவதற்கு கட்டுப்பட்டிருத்தல் வேண்டும்.

(iii) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள், பதவிகளுக்கு உரித்தான ஆட்சேர்ப்பு செய்வதற்கான ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளுக்கும், தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கும், நிதிப் பிரமாணங்களுக்கும் அரசினால் அல்லது பொறுப்பான அமைச்சினால் அல்லது தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்கள பணிப்பாளரினால் வெளியிடப்படும் சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கும் கட்டுப்பட்டு நடத்தல் வேண்டும்.

(iv) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் 2009.02.20 ஆந் திகதியிடப்பட்ட விசேட வர்த்தமானி அறிவித்தல் இலக்கம் 1589/30 இல் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறை ஏற்பாடுகளுடன் தொடர்புபட்ட பொது நிபந்தனைகள் மற்றும் ஏற்பாடுகளுக்கும் பொருத்தமானதாகும்.

12. நிலவுகின்ற பதவி வெற்றிடங்களின் ஒரு பகுதியை அல்லது அனைத்தையும் பூரணப்படுத்துவதற்கான உரிமை தொழில்நுட்பக் கல்வி பயிற்சித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கே உண்டு.

13. இந்த வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிக் கருத்துக்களில் ஏதேனும் முரண்பாடுகள் தோன்றின், அவ்வேளை சிங்கள மொழிக் கருத்தே மேலோங்கி நிற்க வேண்டும்.

ஜே. ஏ. ரஞ்சித்,
பணிப்பாளர் நாயகம்.

தொழில்நுட்பக் கல்வி பயிற்சித் திணைக்களம்,
கொழும்பு 10,
2014, செத்தெம்பர் 5.

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்திற்கு)

மாதிரி விண்ணப்பப்படிவம்

**தொழில்நுட்பக் கல்வி, பயிற்சித் திணைக்களத்தின் ஆரம்பத் தேர்ச்சிபெற்ற சேவைத் தொகையில்................................. பதவிக்கான (திறந்த) ஆட்சேர்ப்பு செய்தல் - 2013 (2014)**

1. விண்ணப்பதாரியின் பெயர் :

(i) முதலெழுத்துக்கள் இறுதியில் குறிப்பிடப்பட்டு, முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

(ii) முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

(iii) முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

2. முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம் :

(i) அலுவலக முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
அலுவலக முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.
தொலைபேசி இலக்கம் :----.

(ii) தனிப்பட்ட முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
தனிப்பட்ட முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.
தொலைபேசி இலக்கம் :----.

(முகவரி அல்லது தொலைபேசி இலக்கத்தில் மாற்றம் ஏற்படின் உடனடியாக அறியத்தரல் வேண்டும்.)

3. பிறந்த திகதி :

ஆண்டு ---- மாதம் ---- திகதி ----

4. விண்ணப்ப முடிவுத் திகதியன்று வயது :

வருடங்கள் ---- மாதங்கள் ---- நாட்கள் ----

5. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

6. பால் (ஆண்/பெண்) :----.

7. குடியியல் நிலைமை :
திருமணமானவர்/திருமணமாகாதவர்/தாரமிழந்தவர் :----.

8. கல்வித் தகைமைகள் :
க. பொ. த. (சாதாரண தரம்) பரீட்சை :
வருடம் :---- பரீட்சை சுட்டெண் :----

| பாடம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

9. தொழில்சார் தகைமைகள் :

| பரீட்சை/ டிப்ளோமா | ஆண்டு | தோற்றிய பாடங்கள் | பெறு பேறு | நிறுவனத்தின்/ பல்கலைக் கழகத்தின் பெயர் |
|---|---|---|---|---|
| | | | | |

10. சேவை அனுபவம் தொடர்பான விபரம் :

| சேவையாற்றிய நிறுவனம் | பதவி | சேவையாற்றிய காலப்பகுதி | அரசாங்கத் துறை/இடை நிலை அரசாங்கத் துறை/ தனியார் துறை போன்றன |
|---|---|---|---|
| | | | |

11. (i) நீர் இலங்கைப் பிரசையாக இருப்பது பிறப்பினாலா/ பதிவுசெய்ததன் மூலமா என்பதைக் குறிப்பிடவும் :----.

(பதிவு செய்ததன் மூலம் எனில், அது தொடர்பான விபரங்களைக் குறிப்பிடவும்) :----.

(ii) இனம் :
சிங்களவர்-1, இலங்கைத் தமிழர்-2, இலங்கை முஸ்லிம்-3, இந்திய வம்சாவளியினர்-4, வேறு-5 ☐

(அடைப்பினுள் உரிய இலக்கத்தை குறிப்பிடவும்)

12. நீர் அரசாங்கப் பதவி ஒன்றிலிருந்து நீக்கப்பட்டவரா ? :----.

13. தற்போது அரசாங்க சேவையில் உள்ளீர் எனில் உமக்கு எதிராக திணைக்களம் ஒழுக்காற்று விசாரணைகளை மேற்கொண்டுள்ளதா ? :----.

14. நீர் ஏதேனுமொரு குற்றச்சாட்டு தொடர்பாக நீதிமன்றத்தினால் குற்றவாளியாகத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளீரா ? அவ்வாறு இருப்பின் விபரத்தைக் குறிப்பிடவும் :----.

15. தொழில்சார் பரீட்சைக்காக கட்டணம் செலுத்திய மக்கள் வங்கிக் கிளை :----.

பணம் செலுத்திய திகதி :----.

பற்றுச்சீட்டு கழன்றுவிடாதவாறு இங்கு ஒட்டப்படுதல் வேண்டும்.

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் சரியானவையும் உண்மையானவையும் என இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இங்கு வழங்கப்பட்டுள்ள தகவல்கள் எதுவும் போலியானவை அல்லது பிழையானவை என நான் தெரிவுசெய்யப்பட முன்னர் தெரியவருமிடத்து விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என்பதையும், தெரிவுசெய்யப்பட்ட பின்னர் அது தொடர்பாகத் தெரியவந்தால் எந்தவித நஷ்டஈடும் வழங்கப்படாது சேவையில் இருந்து நீக்கப்படுவதற்கு கட்டுப்பட்டுள்ளேன் என்பதையும் அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

16. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் : திரு./திருமதி/செல்வி ........................................ அவர்களை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்றும், அவர்/ அவள் ........................................ ஆந் திகதி எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
கையொப்பத்தை உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

உறுதிப்படுத்திய உத்தியோகத்தரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

*(இந்தப் பகுதி, அரசாங்கத் தொழிலில் உள்ளவர்களுக்கு மாத்திரம்)*

**திணைக்கள/நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

இந்த அமைச்சில்/திணைக்களத்தில்/நிறுவனத்தில் சேவையாற்றும் திரு./ திருமதி/ செல்வி ............................... அவர்கள், ................................ எனும் பதவியில் பணியாற்றுபவர் எனவும், இவரது பணி மற்றும் நடத்தைகள் திருப்திகரமானவை எனவும், இவருக்கு எதிராக எவ்வித ஒழுக்காற்று நடவடிக்கைகளும் இல்லை எனவும், அது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான எண்ணங்கள் இல்லை எனவும் தொழில்சார் பரீட்சைக்கான கட்டணத்தைச் செலுத்தி அதன் பற்றுச்சீட்டை இணைத்துள்ளார் எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இவர் இந்தப் பதவிக்கு நியமிக்கப்படுமிடத்து, இவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/விடுவிக்க முடியாது.

----,
திணைக்களத் தலைவரின் அல்லது
அதிகாரம் வழங்கப்பட்ட
உத்தியோகத்தரின் கையொப்பம்.

திகதி :----.
(உத்தியோகபூர்வ முத்திரை)

*9-173*

---

## இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு

தொழில்நுட்பக் கல்வி, பயிற்சித் திணைக்களம்

**தொழில்நுட்பக் கல்வி, பயிற்சித் திணைக்களத்தின் ஆரம்பத் தேர்ச்சிபெற்ற சேவைத் தொகைக்கு உரித்தான பதவிகளின் வெற்றிடங்களுக்காக (மட்டுப்படுத்தப்பட்ட) ஆட்சேர்ப்புச் செய்தல் - 2013 (2014)**

தொழில்நுட்பக் கல்வி, பயிற்சித் திணைக்களத்தினதும் அதன் கீழுள்ள தொழில்நுட்பவியல்/தொழில்நுட்பக் கல்லூரிகளிலும் ஆரம்ப தேர்ச்சிபெற்ற சேவைத் தொகைக்கு உரித்தான பின்வரும் பதவி வெற்றிடங்களைப் பூர்த்திசெய்வதற்காக, தொழில்நுட்பக் கல்வி, பயிற்சித் திணைக்களத்தில் ஆரம்ப தேர்ச்சியற்ற மற்றும் ஆரம்ப பகுதித் தேர்ச்சிபெற்ற சேவைத் தொகையில் திணைக்களம்சார் பதவியொன்றில் உரிய தகைமைகளைப் பூர்த்திசெய்த உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரர்கள் நிரந்தர நியமனங்களைக் கொண்டிருக்க வேண்டியதோடு, அந்த நியமனங்கள் நிரந்தரமாக்கப்பட்டிருக்கவும் வேண்டும் :

| | ஆட்சேர்ப்புச் செய்யப்படும் பதவி | வெற்றிட எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | ஒட்டுனர் | 03 |
| 2 | இயந்திர நிபுணர் | 03 |
| 3 | மின்னியலாளர் | 02 |
| 4 | மேசன் | 03 |
| 5 | தச்சர் | 01 |

1. **ஆட்சேர்ப்பு முறை.**- முதலில் தொழில்சார் பரீட்சையொன்று நடத்தப்படுவதோடு, அப்பரீட்சையில் திறமை அடிப்படையில் பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்பவர்களில் இருந்து, வெற்றிட எண்ணிக்கையில் இருமடங்கினர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப் படுவர். கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையிலும் தொழில்சார் பரீட்சையிலும் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளின் மொத்த எண்ணிக் கைக்கு ஏற்ப திறமை அடிப்படையில் வெற்றிடங்கள் நிலவும் உரிய பதவிகளின் III ஆம் தரத்தில் ஆட்சேர்ப்பு செய்யப்படுவர்.

**தொழில்சார் பரீட்சை :**

| | பதவி | நேரம் (மணித்தியாலம் | அதி கூடிய புள்ளிகள் | சித்தி அடைவதற்கான புள்ளிகள் | பாடப்பரப்பு |
|---|---|---|---|---|---|
| 1 | ஒட்டுனர் | 2 | 100% | 40% | 1. திட்டத்தை வாசித்து புரிந்து கொள்ளக் கூடிய ஆற்றல்<br>2. வேலைகள் தொடர்பிலான உரிய ஆக்கப் பொருட்களை அறிந்து கொள்ளல் |
| 2 | இயந்திர நிபுணர் | 2 | 100% | 40% | 1. பதவிக்கு ஏற்புடையதான மோட்டார் இயந்திர அறிவியல் தொடர்பான தொழில் நுட்பவியல் அறிவு |

| | பதவி | நேரம் (மணித்தியாலம் | அதி கூடிய புள்ளிகள் | சித்தி அடைவதற்கான புள்ளிகள் | பாடப்பரப்பு |
|---|---|---|---|---|---|
| | | | | | 2. இயந்திரங்களில் ஏற்படும் பழுதுகளை இனங்காணல்<br>3. திருத்த வேலைகளுக்கான செலவு மாதிரிகளைத் தயாரித்தல் |
| 3 | மின்னியலாளர் | 2 | 100% | 40% | 1. மின்னியல் சார் நிர்மாணிப்பை தயாரித்தல்<br>2. மின்மானி உபகரணங்கள் மற்றும் அவற்றின் பாவனை தொடர்பான தெளிவு<br>3. மின்னியல் சார் நிர்மாணம் ஒன்றின் பழுதுகளை இனங்காணல் மற்றும் பராமரிக்கும் ஆற்றலை பரீட்சித்தல் |
| 4 | மேசன் | 2 | 100% | 40% | 1. நிர்மாணத் தொழிற் துறையில் பயன்படுத்தப்படும் சீமெந்துக் கலவை, கொங்றீட் கலவை தொடர்பான அறிவு |
| | | | | | 2. மேசன் தொழிலில் பயன்படுத்தப்படும் கருவிகள் தொடர்பான அறிவு<br>3. திட்டங்கள் தொடர்பிலான செலவு மாதிரிகளைத் தயாரித்தல் |
| 5 | தச்சர் | 2 | 100% | 40% | 1. திட்டங்கள் மற்றும் இலகுவான வரைதல்களை விளங்கிக் கொள்ளல்<br>2. வேலைகளுக்குப் பொருத்தமான பலகைகளை இனங்காணல், நிர்மாணத் துறை மற்றும் வீடமைப்பு தொடர்பிலான தெளிவு<br>3. அடிப்படைக் கையுபகரணங்களை இனங்காணல் மற்றும் அதன் பிரயோகம் குறித்த தெளிவு |

**கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை :**

| புள்ளிகள் வழங்கப்படுவதற்கான பிரதான தலைப்புக்கள் | வழங்கப்படும் அதிகூடிய புள்ளிகள் |
|---|---|
| மேலதிக கல்வித் தகைமைகள் | 20 |
| மேலதிக தொழில்சார் தகைமைகள் | 50 |
| மேலதிக அனுபவம் | 25 |
| நேர்முகப் பரீட்சையில் வெளிக்காட்டும் திறமைகள் | 05 |
| மொத்தம் | 100 |

**2. கல்வித் தகைமைகள்.-** க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாதவாறு இரண்டு (2) திறமைச் சித்திகளுடன் ஆறு (6) பாடங்கள் சித்தியடைந்திருத்தல்.

3. ஒவ்வொரு பதவிக்கும் உரிய தொழில்சார் தகைமைகள் பின்வருமாறு.- (i) தொழில்சார் தகைமைகள்.- மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டவாறு தேசிய தொழில் தகைமை (NVQ) 4 ஆம் மட்டத்திற்குக் குறையாத, பதவிக்கு ஏற்புடையதான துறையில், பாடநெறியொன்றைப் பூர்த்திசெய்து அதில் சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

(அ) ஒட்டுனர் :

(1) தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களத்தினால் நடத்தப்படும் பொறியியல் தேர்ச்சி தொடர்பான தேசிய சான்றிதழ் (ஒட்டும் இயந்திர நிபுணர்) ;

அல்லது

(2) தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றில் ஒட்டும் வேலை தொடர்பாக முழுநேர பாடநெறி ஒன்றைத் தொடர்ந்தமைக்கான சான்றிதழ் ;

அல்லது

(3) தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை/தொழில் பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படும் ஒட்டுநனர் II ஆம் தரத்திற்கான தேசிய தொழில் தகைமை சான்றிதழைப் பெற்றிருத்தல் ;

அல்லது

(4) மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் ஒரு வருட காலத்திற்குக் குறையாத ஒட்டும் வேலை தொடர்பான முழுநேரப் பாடநெறி ஒன்றைத் தொடர்ந்து அதில் சித்தியடைந்திருத்தல்.

(ஆ) இயந்திர நிபுணர் :

(1) தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களத்தினால் நடத்தப்படும் பொறியியல் தேர்ச்சி தொடர்பான தேசிய சான்றிதழ் (இயந்திர நிபுணர்) ;

அல்லது

(2) தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றில் இயந்திர அறிவியல் தொடர்பாக இரு வருட கால பாடநெறி ஒன்றில் சித்தியடைந்தமைக்கான சான்றிதழ் ஒன்றைப் பெற்றிருத்தல் ;

அல்லது

(3) மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் ஒரு வருட காலத்திற்குக் குறையாத இயந்திர நிபுணத்துவம் தொடர்பான முழுநேரப் பாடநெறி ஒன்றைத் தொடர்ந்து அதில் சித்தியடைந்திருத்தல்.

(இ) மின்னியலாளர் :

(1) அரச தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றினால் வழங்கப்படும் இரு வருட கால முழுநேர தொழில் சான்றிதழ் அல்லது பொறியியல் தொழில்சார் தேசிய சான்றிதழ் (மின்னியலாளர்) பெற்றிருத்தல் ;

அல்லது

(2) தேசிய பயிலுனர் சபை மூலம் (தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை) வழங்கப்படும் மூன்றரை (3 1/2) வருடகால மின்சக்தி நிபுணத்துவ சான்றிதழ் அல்லது மின்கம்பி இழுப்பவர் பாடநெறிக்கான மூன்று வருட கால சான்றிதழ் ;

அல்லது

(3) தேசிய தொழில் பரீட்சையில் மின் தொழில்நுட்பவியலில் தரம் II இற்காக வழங்கப்படும் சான்றிதழ் ;

அல்லது

(4) வேறு சமமான அல்லது உயர் சான்றிதழ்..

(ஈ) மேசன் :

(1) தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களத்தினால் நடத்தப்படும் பொறியியல் தேர்ச்சி தொடர்பான தேசிய சான்றிதழ் (மேசன்) பெற்றிருத்தல் ;

அல்லது

(2) தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றில் கட்டடத் தொழில் தொடர்பான இருவருட கால பாடநெறி ஒன்றில் சித்தியடைந்தமைக்கான சான்றிதழ் ஒன்றைப் பெற்றிருத்தல் ;

அல்லது

(3) தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களத்தினால் நடத்தப்படும் கட்டட நிர்மாணத் தொழில்நுட்பவியல் தொடர்பான தேசிய சான்றிதழைப் பெற்றிருத்தல் ;

அல்லது

(4) தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையினால் வழங்கப்படும் மேசன் பயிலுனர் சான்றிதழைப் பெற்றிருத்தல் ;

அல்லது

(5) தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையினால் அல்லது இலங்கை தொழில் பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படும் மேசன் தரம் II இற்கான தேசிய தொழில் சான்றிதழ் ;

அல்லது

(6) மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் ஒரு வருட காலத்திற்குக் குறையாத மேசன் தொடர்பான முழுநேரப் பாடநெறி ஒன்றைத் தொடர்ந்து அதில் சித்தியடைந்திருத்தல்.

(உ) தச்சர் :

(1) தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களத்தினால் நடத்தப்படும் பொறியியல் தேர்ச்சி தொடர்பான தேசிய சான்றிதழ் (இயந்திர மரவேலை) பெற்றிருத்தல் ;

அல்லது

(2) தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றில் தச்சுத் தொழில் மற்றும் பொருத்து வேலை தொடர்பான இருவருட கால பாடநெறி ஒன்றில் சித்தியடைந்தமைக்கான சான்றிதழ் ஒன்றைப் பெற்றிருத்தல் ;

அல்லது

(3) தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களத்தினால் நடத்தப்படும் கட்டட நிர்மாணத் தொழில்நுட்பவியல் தொடர்பான தேசிய சான்றிதழைப் பெற்றிருத்தல் ;

அல்லது

(4) தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையினால் வழங்கப்படும் தச்சு வேலை பயிலுனர் சான்றிதழைப் பெற்றிருத்தல் ;

அல்லது

(5) தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையினால் அல்லது இலங்கை தொழில் பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படும் தச்சு வேலை தரம் II இற்கான தேசிய தொழில் சான்றிதழ் ;

அல்லது

(6) மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் ஒரு வருட காலத்திற்குக் குறையாத தச்சு வேலை தொடர்பான முழுநேரப் பாடநெறி ஒன்றைத் தொடர்ந்து அதில் சித்தியடைந்திருத்தல்.

4. **சேவை அனுபவம்**.- விண்ணப்ப முடிவுத் திகதியன்று தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களத்தில் ஆரம்ப தேர்ச்சியற்ற மற்றும் ஆரம்ப பகுதித் தேர்ச்சிபெற்ற திணைக்களம்சார் பதவியொன்றில் நிரந்தர நியமனம் பெற்றிருப்பதோடு, 5 ஆண்டுகள் தொடரான, திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும். அவ்வாறு பூர்த்திசெய்தமை தொடர்பில் திணைக்களத் தலைவரால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தலும் வேண்டும். ஏதேனும் ஒரு பதவியில் நிரந்தரமாக்கப்படுவதற்கு முன்னர் சேவையாற்றியிருப்பின் அல்லது ஏதேனும் ஒரு பதவிக்கு நிரந்தரமாக நியமிக்கும் பொருட்டு நிபந்தனைகளுடன் சேவையாற்றிய பயிற்சிக்காலப் பகுதியில் அல்லது ஏதேனும் ஒரு பதவிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுவதற்கு முன்னர் சேவையாற்றியுள்ள தற்காலிக/அமைய/உதவிச் சேவைக் காலப்பகுதியில் இந்தத் தகைமைகள் பெறவேண்டிய 5 வருட காலப்பகுதி தொடர்பாக கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது.

5. **வயதெல்லை**.- பொருத்தமில்லை.

6. **சம்பளம்**.- பொது நிர்வாக சுற்றறிக்கை 6/2006 (IV) இற்கு அமைய இந்தப் பதவிக்கான சம்பளக் குறியீட்டு இலக்கம் PL-3-2006 (A) சம்பள அளவுத்திட்டம் ரூபா 12,470 - 10 x 130 - 10 x 145 - 10 x 160 - 12 x 170 - 18,860 உரித்தாகும்.

7. மேற்குறிப்பிடப்பட்ட பதவிகளுக்காக விண்ணப்பிக்கும் சகலரும் சிறந்த இயல்பையும் இலங்கையின் எப்பகுதியிலும் சேவையாற்றக்கூடிய வகையிலும் பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றக்கூடிய உடல் மற்றும் உள ஆரோக்கியத்தையும் கொண்ட இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும். ஒவ்வொரு பதவிக்கும் ஆட்சேர்ப்பு செய்வதற்குத் தேவையான சகல தகைமைகளையும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதியன்று எல்லா வகையிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

8. **விண்ணப்பப்படிவங்கள் அனுப்பப்பட வேண்டிய முறைகள்**.- (i) இங்கு கீழே காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு ஏற்ப, விண்ணப்பங்களை ஏ4 தாளைப் பன்படுத்தி இலக்கம் 1 தொடக்கம் 7 வரை முதலாம் பக்கத்திலும், இலக்கம் 8 முதல் 11 வரை இரண்டாம் பக்கத்திலும் ஏனைய விடயங்களை அடுத்தடுத்த பக்கங்களிலும் வருமாறு விண்ணப்பப்படிவங்களைத் தயாரித்து தமது கையொழுத்தினால் முறையாகப் பூர்த்தி செய்து ''பணிப்பாளர் நாயகம், தொழில்நுட்பக் கல்வி பயிற்சித் திணைக்களம், த. பெ. இலக்கம் 557, ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10'' என்ற முகவரிக்கு 2014.10.06 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தை உள்ளடக்கிய கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''...................................................... (குறித்த பதவியைக் குறிப்பிடுதல் வேண்டும்.) பதவிக்கான விண்ணப்பம்'' என்று தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்.

(ii) இங்கு காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு மாற்றமான விண்ணப்பப்படிவங்கள், பூரணமில்லாத தகவல்கள் அடங்கிய விண்ணப்பப்படிவங்கள் மற்றும் விண்ணப்பங்களைப் பொறுப்பேற்கும் இறுதித் திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விண்ணப்பங்களை தபாலில் அனுப்பும்போது ஏற்படும் காலதாமதத்தை தவிர்ப்பதற்காக முன்கூட்டியே விண்ணப்பங்களை அனுப்புதல் உகந்ததாகும்.

(iii) ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்காக விண்ணப்பிக்க வேண்டியிருப்பின் ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனியான விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(iv) பெறப்பட்ட விண்ணப்பங்களுள் அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்திசெய்த விண்ணப்பதாரிகள் மாத்திரமே தொழில்சார் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

(v) தொழில்சார் பரீட்சைக் கட்டணம் 400 ரூபா ஆக இருப்பதோடு, அந்தக் கட்டணங்கள் தொழில்நுட்பக் கல்வி பயிற்சித் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் மக்கள் வங்கியின் மத்திய நகரக் கிளை இலக்கமான 176-100-139026228 எனும் கணக்கிலக்கத்திற்கு நாட்டிலுள்ள ஏதேனும் ஒரு மக்கள் வங்கிக் கிளையில் பணத்தைச் செலுத்தி, செலுத்தியதற்கான பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தில் உரிய பகுதியில் கழன்றுவிடாதவாறு ஒட்டுதல் வேண்டும். உங்கள் விண்ணப்பப்படிவத்தின் பிரதி ஒன்றையும் பற்றுச்சீட்டின் பிரதி ஒன்றையும் உங்களுடன் வைத்துக்கொள்வது உகந்ததாகும். எந்தவொரு காரணத்துக்காகவும் பரீட்சைக் கட்டணம் மீள வழங்கப்பட மாட்டாது என்பதோடு, காசுக்கட்டளைகள் மற்றும் முத்திரைகள் என்பனவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

(vi) சகல விண்ணப்பதாரிகளும் தொழில்நுட்பவியல்/தொழில்நுட்பக் கல்லூரியின் பணிப்பாளர் அல்லது அதிபர் அல்லது பதிவாளர் மூலம் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்தியிருத்தல் வேண்டும்.

(vii) விண்ணப்பப்படிவங்களில் குறிப்பிடப்பட்ட ஏதேனும் தகவல்கள் போலியானவை அல்லது பிழையானவை என ஆட்சேர்ப்புக்கு முன்னர் கண்டுபிடிக்கப்பட்டால் விண்ணப்பதாரியின் அபேட்சகத் தன்மை நிராகரிக்கப்படும். அவ்வாறான போலியான அல்லது பிழையான தகவல்கள் ஆட்சேர்ப்பிற்குப் பின்னர் கண்டறியப்பட்டால் அதற்குரிய ஏற்பாடுகளுக்கு ஏற்ப சேவையில் இருந்து நீக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(viii) திணைக்களத்திலுள்ள எந்தவொரு நபரின் பெயரிற்கும் விண்ணப்பப்படிவங்கள் அனுப்பப்படக் கூடாது என்பதோடு, அவ்வாறு அனுப்பப்படும் அல்லது நேரடியாக ஒப்படைக்கப்படும் விண்ணப்பங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. ஏதேனும் விண்ணப்பங்கள் தபாலில் அனுப்பப்பட்டதன் பின்னர் காணாமல் போதல் அல்லது தாமதமாக கிடைத்தல் போன்ற முறைப்பாடுகள் எதுவும் கவனத்தில் எடுக்கப்பட மாட்டாது. அதேவேளை, விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றமை பற்றியும் அறியத்தரப்பட மாட்டாது.

9. **அரச கரும மொழிக்கொள்கையை அமுலாக்கல்.**- பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் : 07/2007 மற்றும் அதற்கு இயைபான சுற்றறிக்கைகளுக்கு ஏற்ப குறித்த மட்டத்தில் ஏனைய அரச கரும மொழி தொடர்பான தேர்ச்சியை சேவையில் இணைந்த ஐந்து (5) வருட காலத்தினுள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

10. **தொழில்சார் பரீட்சை நடபடி முறைகள்.**- (i) ஒழுங்கான முறையில் விண்ணப்பங்களை அனுப்பிய அடிப்படைத் தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பதாரிகளுக்கு தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தினால் பரீட்சைக்கான அனுமதி அட்டை வழங்கப்படும். விண்ணப்பதாரி தமக்கு குறிக்கப்பட்ட பரீட்சை மத்திய நிலையத்தின் பரீட்சை மேற்பார்வையாளரிடம் தமது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையைச் சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதி அட்டை சமர்ப்பிக்காத எந்தவொரு விண்ணப்ப தாரியும் தொழில்சார் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்.

(ii) தொழில்சார் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக விண்ணப்பதாரர் களுக்கு போக்குவரத்துச் செலவுகளுக்காகவோ அல்லது இதர செலவுகளுக்காகவோ வேறெந்தக் கொடுப்பனவும் வழங்கப்பட மாட்டாது.

(iii) பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்திப்படுமளவு விண்ணப்பதாரர், தமது ஆளடையாளத்தை பரீட்சை மண்டபத்தில் உறுதிப்படுத்தல் வேண்டும். இதன் பொருட்டு-

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;

அல்லது

(ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு என்பவை மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும்.

(iv) தொழில்சார் பரீட்சைகளை நடாத்துதல் தொடர்பாக தொழில் நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டவிதிகளுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்பட்டுள்ளனர்.

11. **சேவையில் அமர்த்தப்படுவதற்கான நிபந்தனைகள்.**- (i) இந்தப் பதவி நிரந்தரமானது, ஓய்வூதியத்தைக் கொண்டது. விதவை/அநாதை/ தாரமிழந்தவர் அநாதை ஓய்வூதிய நிதியத்திற்கு சந்தா செலுத்துதல் வேண்டும்.

(ii) குறிப்பிடப்படுவதற்கு அமைய இந்த திணைக்களத்திற்கு உட்பட்ட எந்தவொரு தொழில்நுட்பவியல்/தொழில்நுட்பக் கல்லூரியிலும் சேவையாற்றுவதற்கு கட்டுப்பட்டிருத்தல் வேண்டும்.

(iii) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள், பதவிகளுக்கு உரித்தான ஆட்சேர்ப்பு செய்வதற்கான ஒழுங்குவிதியின் ஏற்பாடு களுக்கும், தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கும், நிதிப் பிரமாணங்களுக்கும் அரசினால் அல்லது பொறுப்பான அமைச்சினால் அல்லது தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்கள பணிப்பாள ரினால் வெளியிடப்படும் சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கும் கட்டுப்பட்டு நடத்தல் வேண்டும்.

(iv) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் 2009.02.20 ஆந் திகதியிடப்பட்ட விசேட வர்த்தமானி அறிவித்தல் இலக்கம் 1589/30 இல் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறை ஏற்பாடுகளுடன் தொடர்புபட்ட பொது நிபந்தனைகள் மற்றும் ஏற்பாடுகளுக்கும் பொருத்தமானதாகும்.

12. நிலவுகின்ற பதவி வெற்றிடங்களின் ஒரு பகுதியை அல்லது அனைத்தையும் பூரணப்படுத்துவதற்கான உரிமை தொழில்நுட்பக் கல்வி பயிற்சித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கே உள்ளது.

13. இந்த வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிக் கருத்துக்களில் ஏதேனும் முரண்பாடுகள் தோன்றின், அவ்வேளை சிங்கள மொழிக் கருத்தே மேலோங்கி நிற்க வேண்டும்.

ஜே. ஏ. ரஞ்சித்,
பணிப்பாளர் நாயகம்.

தொழில்நுட்பக் கல்வி, பயிற்சித் திணைக்களம்,
கொழும்பு 10,
2014, செத்தெம்பர் 5.

மாதிரி விண்ணப்பப்படிவம்

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்திற்கு)

**தொழில்நுட்பக் கல்வி, பயிற்சித் திணைக்களத்தின் ஆரம்பத் தேர்ச்சிபெற்ற சேவைத் தொகையில்................................... பதவிக்கான (மட்டுப்படுத்தப்பட்ட) ஆட்சேர்ப்பு செய்தல் - 2013 (2014)**

1. விண்ணப்பதாரியின் பெயர் :

(i) முதலெழுத்துக்கள் இறுதியில் குறிப்பிடப்பட்டு, முதலெழுத் துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(ii) முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(iii) முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

2. முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம் :

(i) அலுவலக முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
அலுவலக முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.
தொலைபேசி இலக்கம் :----.
(ii) தனிப்பட்ட முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
தனிப்பட்ட முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.
தொலைபேசி இலக்கம் :----.

(முகவரி அல்லது தொலைபேசி இலக்கத்தில் மாற்றம் ஏற்படின் உடனடியாக அறியத்தரல் வேண்டும்.)

3. பிறந்த திகதி :

ஆண்டு ---- மாதம் ---- திகதி ----

4. விண்ணப்ப முடிவுத் திகதியன்று வயது :

வருடங்கள் ---- மாதங்கள் ---- நாட்கள் ----

5. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

6. பால் (ஆண்/பெண்) :----.

7. குடியியல் நிலைமை :
திருமணமானவர்/திருமணமாகாதவர்/விதவை போன்றன :----.

8. கல்வித் தகைமைகள் :
க. பொ. த. (சாதாரண தரம்) பரீட்சை :
வருடம் ---- பரீட்சை சுட்டெண் ----

| பாடம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

9. தொழில்சார் தகைமைகள் :

| பரீட்சை/ டிப்ளோமா | ஆண்டு | தோற்றிய பாடங்கள் | பெறு பேறு | நிறுவனத்தின் பெயர் |
|---|---|---|---|---|
| | | | | |

10. சேவை அனுபவம் தொடர்பான விபரம் :

(i) தற்போது வகிக்கின்ற பதவி :----.

(ii) நியமனத்தைப் பொறுப்பேற்ற திகதி :----.

(iii) விண்ணப்ப முடிவுத் திகதியன்று சேவைக்காலம் :----.

(iv) விண்ணப்ப முடிவுத் திகதிக்கு அண்மித்த 5 வருட காலத்தினுள் வேதன ஏற்றத்தை சம்பாதித்துள்ளீரா ? :----.

(v) விண்ணப்ப முடிவுத் திகதிக்கு அண்மித்த 5 வருட காலத்தினுள் சம்பளமற்ற விடுமுறை எடுத்துள்ளீரா ? :----.

(vi) விண்ணப்ப முடிவுத் திகதிக்கு அண்மித்த 5 வருட காலத்தினுள் எச்சரிக்கை தவிர்ந்த ஒழுக்காற்றுத் தண்டனைகளைப் பெற்றுள்ளீரா ? :----.

11. தொழில்சார் பரீட்சைக்காக கட்டணம் செலுத்திய மக்கள் வங்கிக் கிளை :----.

பணம் செலுத்திய திகதி :----.

| பற்றுச்சீட்டை கழன்றுவிடாதவாறு இங்கு ஒட்டப்படுதல் வேண்டும். |
|---|

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் சரியானவையும் உண்மையானவையும் என இத்தால் உறுதிப்படுத்து கின்றேன். இங்கு வழங்கப்பட்டுள்ள தகவல்கள் எதுவும் போலியானது அல்லது பிழையானது என நான் தெரிவுசெய்யப்பட முன்னர் தெரியவருமிடத்து எனது விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என்பதையும், தெரிவுசெய்யப்பட்ட பின்னர் அது தொடர்பாகத் தெரியவந்தால் எந்தவித நஷ்டஈடும் வழங்கப்படாது சேவையில் இருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

(இப்பகுதியானது, அரசாங்க தொழிலில் உள்ளவர்களுக்கு மட்டும்)

**திணைக்கள/நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

தொழில்நுட்பக் கல்வி பயிற்சித் திணைக்களத்தில் சேவையாற்றும் திரு./ திருமதி/ செல்வி ............................................ அவர்கள் ................................................... எனும் பதவியில் தற்போது

பணியாற்றுபவர் எனவும் இவரது பணி மற்றும் நடத்தைகள் திருப்திகரமானவை எனவும், இவருக்கு எதிராக எவ்வித ஒழுக்காற்றுத் நடவடிக்கைகளும் இல்லை எனவும், அது தொடர்பான நடவடிக்கை களை மேற்கொள்வதற்கான எண்ணங்கள் இல்லை எனவும் உரிய தொழில்சார் பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியுள்ளார் எனவும், அந்தப் பற்றுச்சீட்டு இணைக்கப்பட்டுள்ளது எனவும் இத்தால் உறுதிப்படுத்து கின்றேன். இவர் இந்தப் பதவிக்கு நியமிக்கப்படுமிடத்து இவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது.

----,
திணைக்களத் தலைவரின் அல்லது
அதிகாரம் வழங்கப்பட்ட
உத்தியோகத்தரின் கையொப்பம்.

திகதி :----.
(உத்தியோகபூர்வ முத்திரை)

9-174

---

**கல்வி அமைச்சு**

இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் 2 ஆம் வகுப்பின் II ஆம் தர உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன் தடை தாண்டற் பரீட்சை - 2014

இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் 2 ஆம் வகுப்பின் II ஆம் தர உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன் தடைதாண்டற் பரீட்சை 2014 ஆம் ஆண்டு மார்கழி மாதம் கொழும்பில் நடைபெறும்.

2. இப்பரீட்சைக்குரிய பாடவிதானம் மற்றும் ஏனைய ஒழுங்கு விதிகள் 1999, மாச்சு 11 ஆந் திகதிய 1070/13 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. வசதிக்காக அப்பாடவிதானம் மற்றும் ஏனைய ஒழுங்குவிதிகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

உத்தியோகத்தர் ஒருவருக்கு வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சைக்குரிய பாடங்களை ஒரே தடவையில் அல்லது தனித்தனியான சந்தர்ப்பங்களில் தோற்ற முடியும்.

*பாடவிதானம் :*

| விடய இல. | பாடம் | புள்ளி | காலம் |
|---|---|---|---|
| 01 | **பொது முகாமைத்துவம் மற்றும் தாபனச் செயற்பாடுகள் :** அரச தாபனக்கோவையின் i, ii, iii, iv, v, vii, viii, ix, xii, xiii, xiv, xxiv, xxviii, xxx மற்றும் xxxi ஆகிய வாசகங்களுக்கு விசேட கவனத் துடன் தாபன விதிக்கோவை யின் சட்டம் (எல்லா வினாக்களுக் கும் விடையளிக்க வேண்டும்.) | 100 | 1 1/2 மணித்தி யாலம் |
| 02 | **நிதி ஒழுங்குக் கோவை :** அரச நிதி ஒழுங்குக் கோவையின் முதலாவது பிரிவின் i, ii, v, viii, xii மற்றும் xiv வாசகங்களுக்கு விசேட கவனத்துடன் (எல்லா வினாக் களுக்கும் விடையளிக்க வேண்டும்.) | 100 | 1 1/2 மணித்தி யாலம் |
| 03 | **கல்விச் சட்டம் :** பரீட்சார்த்திகளிடம் கீழ்க்குறிப்பிடப் பட்ட கட்டளைச் சட்டம் மற்றும் பாராளுமன்றச் சட்டம் தொடர்பான அறிவு எதிர்பார்க்கப்படுகின்றது- (i) 1939 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க கல்விக் கட்டளைச் சட்டம் மற்றும் அதன் கீழ் விதிக்கப்பட்ட சட்டக் கோவைகள். (ii) 1960 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க உதவி நன்கொடை பெறும் பாடசாலை மற்றும் ஆசிரியர் கல்லூரி (விசேட ஒழுங்கு விதிகள்) சட்டம். (iii) 1961 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க உதவி நன்கொடை பெறும் பாடசாலை மற்றும் ஆசிரியர் கல்லூரி (குறை நிரப்பு ஒழுங்குவிதிகள்) சட்டம். (iv) 1976 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பகிரங்கப் பரீட்சை (மறுசீரமைப்பு)ச் சட்டத்தி னால் மறுசீரமைக்கப்பட்ட 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பகிரங்க பரீட்சைச் சட்டம். (v) 1981 ஆம் ஆண்டின் 65 ஆம் இலக்க உதவி நன்கொடை பெறும் பாடசாலை (விசேட ஒழுங்குவிதிகள்) சட்டம். (vi) 1985 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க தேசிய கல்வித் தாபனச் சட்டம். (vii) 1986 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க கல்விக் கல்லூரிச் சட்டம். (viii) 1991 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசியக் கல்வி ஆணைக்குழுச் சபைச் சட்டம். (ix) 1997 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க தேசிய ஆசிரிய கல்வி அதிகாரசபைச் சட்டம். (x) 13 ஆவது மறுசீரமைப்பு மற்றும் அடிப்படை உரிமை தொடர்பான 3 ஆவது வாசகத்துக்கு விசேட கவனத் துடன் இலங்கை அரசியல் யாப்பு. (xi) கல்விக்குரியதான மாகாண சபையினால் விதிக்கப்பட்ட கட்டளைச் சட்டம். (எல்லா வினாக்களுக்கும் விடை யளிக்க வேண்டும்.) | 100 | 2 மணித் தியாலம் |

**குறிப்பு**.- பரீட்சார்த்திகளினால் வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைய ஒவ்வொரு வினாப்பத்திரத்திலும் 40% புள்ளிகளைப் பெறவேண்டும்.

3. **பரீட்சையின் மொழிமூலம்**.- (i) இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம் நடாத்தப்படும். விண்ணப்பிக்கும் மொழி மூலத்தைப் பின்னர் மாற்றியமைக்க இடமளிக்கப்பட மாட்டாது.

(ii) போட்டிப் பரீட்சை மூலம் அரச சேவையில் இணைந்துகொண்ட பரீட்சார்த்தியாயின் பரீட்சையின் மொழி மூலமாக போட்டிப் பரீட்சைக்குத் தோற்றிய மொழி மூலமும், போட்டிப் பரீட்சை இன்றி அரச சேவையில் இணைந்துகொண்ட பரீட்சார்த்தியாயின் இப்பரீட்சையின் மொழி மூலமாக அரச சேவைக்குப் பிரவேசிக்கத் தகைமை பெற்ற பரீட்சைக்குத் தோற்றிய மொழியினைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

4. பரீட்சார்த்தி தமக்கு உரிமையற்ற மொழிமூலம் பரீட்சைக்குத் தோற்றுவதாகத் தெரியவருமிடத்து அவர் பரீட்சார்த்தி நிலையிலிருந்து நீக்கப்படுவார்.

5. விண்ணப்பப்படிவம் கீழ்க்குறிப்பிடப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய தயாரிக்கப்பட வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் சகல தலைப்புக்களும் முதலாம் பக்கத்தில் அமையக்கூடியவாறு தயாரிக்கப்பட வேண்டியதுடன் அதற்குரிய தகவல்களை தமது கையெழுத்தினால் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஒவ்வாத விண்ணப்பப்படிவங்களும், முழுமையாகப் பூர்த்திசெய்யப்படாத தகவல்களைக் கொண்ட விண்ணப்பப்படிவங்களும் முன்னறிவித்தல் இன்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தின் போட்டோப் பிரதியை வைத்திருப்பது பயன்மிக்கது என்பதுடன் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட மாதிரி படிவத்திற்கமைவானதா என்பது குறித்து விண்ணப்பதாரியினால் வினவ வேண்டியதுடன் அவ்வாறு இல்லாதபட்சத்தில் விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தைத் தயாரிக்கும்போது அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயரைச் சிங்கள மொழிமூல விண்ணப்பப்படிவங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் மொழிமூலம் விண்ணப்பப்படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடவேண்டும்.

6. இப்பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் கொழும்பில் நடாத்தப்படுவதுடன் பரீட்சை நடாத்துவதற்காக அவரால் விதிக்கப்பட்ட சட்டங்களைப் பின்பற்ற பரீட்சார்த்தி பொறுப்பாக இருக்க வேண்டும்.

7. விண்ணப்பப்படிவத்தை 2014 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 6 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைக் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், தபால் பெட்டி இல. 1503, கொழும்பு" என்ற விலாசத்திற்கு பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டும். அத்தினத்திற்குப் பின்னர் அனுப்பப்படும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் 2-II வினைத்திறன் தடைதாண்டற் பரீட்சை" எனக் குறிப்பிட்டு அனுப்பவேண்டும்.

8. விண்ணப்பதாரர்களுக்கு அனுமதி அட்டை அனுப்பப்பட்டவுடன் அது தொடர்பாகக் குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்தல் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் பிரசுரிக்கப்படும். அறிவித்தல் பிரசுரமாகி 2 அல்லது 3 நாட்கள் கடந்த பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காதவர்கள் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டவாறு அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிக்க வேண்டும். தாங்கள் வைத்துக்கொண்ட விண்ணப்பப்படிவம் மற்றும் பரீட்சைக் கட்டணம் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டின் உறுதிசெய்யப்பட்ட போட்டோப் பிரதி, பதிவுசெய்த பற்றுச்சீட்டு ஆகியவற்றை கொழும்புக்கு வெளிப் பிரதேசமாயின் அனுமதி அட்டையை அனுப்புவதற்கான தொலைநகல் இலக்கத்தையும் குறிப்பிட்டு தங்களது கோரிக்கைக் கடிதத்தையும் தொலைநகல் மூலம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு வழங்குவது மிகவும் பயன்மிக்கதாக அமையும்.

9. மேற்கூறப்பட்ட 8 ஆவது வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளைப் பூர்த்திசெய்யத் தவறும் பரீட்சார்த்திகளினால் பின்னர் சமர்ப்பிக்கப்படும் முறைப்பாடுகள் கருத்திற்கொள்ளப்படமாட்டாது.

10. விண்ணப்பதாரர் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திய விண்ணப்பப்படிவத்தை பரீட்சை தினத்தன்று பரீட்சை மண்டபத்தில் பரீட்சை மேற்பார்வையாளரிடம் கையளிக்க வேண்டும்.

11. பரீட்சை மண்டபத்தில் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக சான்றுகளை சமர்ப்பிப்பது பரீட்சார்த்தியின் பொறுப்பாக இருப்பதுடன் அதற்காகக் கீழ்க்குறிப்பிடப்பட்ட ஆவணங்களில் ஏதேனும் ஒன்றை சமர்ப்பிக்க வேண்டும் :-

(i) ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை,
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

12. விண்ணப்பதாரர் ஒருவருக்கு பரீட்சை அனுமதி அட்டையொன்றை வழங்குவதன் மூலம் அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்குப் பூரண தகைமைகளைக் கொண்டுள்ளார் எனக் கருதப்பட முடியாது.

13. இப்பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி கீழ்க்குறிப்பிடப்படும் அடிப்படையில் பரீட்சைக் கட்டணத்தை செலுத்த வேண்டும் :-

(அ) முதற் தடவையாகப் பரீட்சைக்குத் தோற்றுபவர்களிடமிருந்து முழுமையான பரீட்சைக் கட்டணம் அல்லது பகுதிக்காக கட்டணம் அறவிடப்பட மாட்டாது.
(ஆ) பரீட்சைக்குத் தோற்றுவது முதல் தடவை அல்லவெனில் கீழ்க்குறிப்பிடப்பட்டதற்கு அமைவாக பரீட்சைக் கட்டணம் அறவிடப்படும் :

| | | ரூபா |
|---|---|---|
| மொத்தப் பரீட்சைக் கட்டணம் | - | 500 |
| ஒரு பாடத்திற்கு | - | 200 |

பரீட்சைக் கட்டணம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இல் வைப்பிடக்கூடியவாறு நாட்டின் எந்தவொரு மாவட்ட அல்லது பிரதேச செயலகத்திற்கு செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தின் உரிய இடத்தில் கழராது ஒட்டவும். (மேலும் அதன் போட்டோப் பிரதியை வைத்திருப்பது பயன்மிக்கதாகும்.)

14. பரீட்சைக்குத் தோற்றிய சகல விண்ணப்பதாரர்களதும் பெறுபேற்று ஆவணங்கள் "செயலாளர், கல்வி அமைச்சு, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்" மூலம் வழங்கப்படும்.

அனுர திஸாநாயக்க,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
"இசுருபாய",
பத்தரமுல்லை,
2014, ஆவணி, 22.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கல்வி அமைச்சு**

***இலங்கை ஆசிரிய கல்வியியலாளர் சேவையின் 2 ஆம் வகுப்பின் II ஆந் தர வினைத்திறன் தடை தாண்டற் பரீட்சை - 2014***

(Efficiency Bar Examination in Class 2 Grade II of Sri Lanka Teacher Educators' Service – 2014)

(விண்ணப்பப்படிவம் "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், தபால் பெட்டி 1503, கொழும்பு" என்ற விலாசத்திற்கு நிறுவனத் தலைவரூடாக பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும்.)
(பரீட்சையின் பெயர் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடப்பட வேண்டும்.)

உத்தியோகத்தர் பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4 ☐
(உரிய குறியீட்டு இலக்கத்தைக் குறிப்பிடவும்)

1. (அ) முதலெழுத்துக்களை இறுதியில் குறிப்பிட்டு முதலெழுத்துக் களுடனான பெயர் (ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்) :-----.
உ-ம் : (Mr./Mrs./Miss) SILVA, A.B.

(ஆ) முதலெழுத்துக்களினால் குறித்துக்காட்டப்படும் பெயர் (ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்) :-----.

2. பிறந்த திகதி :-

ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

3. (i) பதவிப் பெயர் :-----.
(ii) சேவையாற்றும் கல்விக் கல்லூரி/ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி/ ஆசிரிய மத்திய நிலைய முகவரி :-----.
(அனுமதி அட்டை இம்முகவரிக்கு அனுப்பப்படும்)

4. சொந்த முகவரி (ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்) :-----.

5. அறிவித்தலின் 2 ஆம் வாசகம் (அ) இன்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பாட இலக்கம் மற்றும் பாடத்துடன் எடுக்கும் பாடங்களைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும் :-

| பாட இலக்கம் | பாடத்தின் பெயர் |
|---|---|
| | |
| | |
| | |

6. இதற்கு முன்னர் இப்பரீட்சைக்கு முழுமையாக அல்லது அதில் ஒரு பகுதிக்குத் தோற்றியுள்ளாரா ? அவ்வாறாயின் பாடம் மற்றும் தோற்றிய ஆண்டு, மொழிமூலத்தைக் குறிப்பிடவும் :-

| பாடங்கள் | ஆண்டு | மொழி மூலம் | பரீட்சை சுட்டெண் |
|---|---|---|---|
| | | | |
| | | | |

7. செலுத்திய பரீட்சைக் கட்டணம் :-

| |
|---|
| பரீட்சைக் கட்டணம் செலுத்திப் பெற்ற பற்றுச்சீட்டை இங்கு ஒட்டவும். பிரதியை வைத்திருப்பது பயன்மிக்கது. |

8. மேற்கூறப்பட்ட விபரங்கள் சரியானவை என்றும், வர்த்தமானி அறிவித்தலில் 3 ஆவது வாசகத்தில் குறிப்பிடப்பட்ட மொழி மூலம் இப்பரீட்சைக்குத் தோற்ற எனக்கு உரிமை உண்டு என்பதை தெரிவிக்கிறேன். மேலும் பரீட்சை நடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்குகளுக்கு கட்டுப்பட இணங்குகிறேன்.

------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

பரீட்சை ஆணையாளர் நாயகம்,
பரீட்சைத் திணைக்களம்.

முன்வைக்கின்றேன்.

இவ்விபரம் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சார்த்தி இப்பரீட்சைக்குத் தோற்ற தகுதிபெற்றவர் என்றும் வர்த்தமானி அறிவித்தலின் 3 ஆவது வாசகத்திற்கமைய அவரால் குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலம் இப்பரீட்சைக்குத் தோற்ற தகைமை உடையவர் என்றும் சான்று படுத்துகிறேன். பரீட்சார்த்தி உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்திய தாகவும் அப்பற்றுச்சீட்டை ஒட்டியுள்ளதாகவும் சான்றுபடுத்துகிறேன்.

........................................................
பீடாதிபதி/ஆசிரிய மத்திய நிலையப் பொறுப்பாளரின் கையொப்பம்.

திகதி :-----.

9-208

திருத்தம்

**பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு**

அரசாங்க சேவையின் கனிஷ்ட ஊழியர்களைஅரச முகாமை உதவியாளர் சேவையில் தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை 2013(2014)

2014.08.29 ஆந் திகதிய 1878 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி அறிவித்தலில் இலக்கம் 1066 இன்கீழ் பிரசுரமான அரசாங்க சேவையின் கனிஷ்ட ஊழியர்களை அரச முகாமை உதவியாளர் சேவையில் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை 2013(2014) தொடர்பாக பிரசுரமான மாதிரி விண்ணப்பப்படிவத்தில்-

"4.10. சம்பள அளவுத் திட்டம் (2007.08.24 ஆந் திகதி 06/2006 (iv) ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கைக்கமைய சம்பளக் குறியீடு PL-2006 A/PL - 2006 APL-3-2006A/MN-01-2006A (பொருத்தமற்ற சொற்களைக் கீறிவிடவும்)" என்பது-

"4.10. சம்பள அளவுத் திட்டம் (2007.08.24 ஆந் திகதிய 06/2006 (iv) ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கைக்கமைய சம்பளக் குறியீடு PL-1-2006A/PL-2-2006A/PL-3-2006A/MN-01-2006A (பொருத்தமற்ற சொற்களைக் கீறிவிடவும்)" என திருத்தி வாசிக்கப் படல் வேண்டும்.

கே. வீ. பி. எம். ஜே. கமகே,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்,
பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள்
அமைச்சு.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07.
2014, செத்தெம்பர் 01.

9-514/3

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2013 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**
**எல்லா வர்த்தமானிகளையும் www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், "பொரல்லை" என்பதே மணி ஓடர்களுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,600 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பெறப்படாமை, முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகருக்கே எழுதுங்கள்.**

14. **2013 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்கு மான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III வது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III வது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V வது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI வது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

**எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.***

***முக்கிய கவனிப்பு.***– இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.***

***அட்டவணை - 2014***

| *மாதம்* | | *வெளியீட்டு நாள்* | | | *அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும்* | | |
|---|---|---|---|---|---|---|---|
| **செத்தெம்பர்** | .. | வெள்ளி | *05.09.2014* | .. | *நண்பகல் 12* | வெள்ளி | *22.08.2014* |
| | | வெள்ளி | *12.09.2014* | .. | *நண்பகல் 12* | வெள்ளி | *29.08.2014* |
| | | வெள்ளி | *19.09.2014* | .. | *நண்பகல் 12* | வெள்ளி | *05.09.2014* |
| | | வெள்ளி | *26.09.2014* | .. | *நண்பகல் 12* | வெள்ளி | *12.09.2014* |
| **ஒற்றோபர்** | .. | வெள்ளி | *03.10.2014* | .. | *நண்பகல் 12* | வெள்ளி | *19.09.2014* |
| | | வெள்ளி | *10.10.2014* | .. | *நண்பகல் 12* | வெள்ளி | *26.09.2014* |
| | | வெள்ளி | *17.10.2014* | .. | *நண்பகல் 12* | வெள்ளி | *03.10.2014* |
| | | வெள்ளி | *24.10.2014* | .. | *நண்பகல் 12* | வெள்ளி | *10.10.2014* |
| | | வெள்ளி | *31.10.2014* | .. | *நண்பகல் 12* | வெள்ளி | *17.10.2014* |
| **நவெம்பர்** | .. | வெள்ளி | *07.11.2014* | .. | *நண்பகல் 12* | வெள்ளி | *24.10.2014* |
| | | வெள்ளி | *14.11.2014* | .. | *நண்பகல் 12* | வெள்ளி | *31.10.2014* |
| | | வெள்ளி | *21.11.2014* | .. | *நண்பகல் 12* | வெள்ளி | *07.11.2014* |
| | | வெள்ளி | *28.11.2014* | .. | *நண்பகல் 12* | வெள்ளி | *14.11.2014* |

***பீ. எச். எல். வீ. டீ சில்வா,***
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*